**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.111** **நாள்: 10.08.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 45,000 தெருக்களில் போக்குவரத்திற்கு இடையூறின்றி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்க அலுவலர்களுக்கு ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகள், அரசு கட்டடங்கள், தனியார் கட்டடங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைப்பது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (10.08.2019) ரிப்பன் மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள நீர் ஆதாரங்களை புனரமைத்து புத்துயிர் அளிக்கவும், அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பாக பல்வேறுவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து இடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்திட பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பாக வார்டு வாரியாக ஒரு குழு வீதம் 200 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

பருவமழை காலத்திற்கு முன்னதாக ஒரு வார்டுக்கு 1,000 கட்டிடங்கள் வீதம் 200 வார்டுகளில் 2 இலட்சம் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க இக்குழுக்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுநாள்வரை இக்குழுக்களால் 2,12,468 கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளனவா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 1,15,779 கட்டடங்களில் ஏற்கனவே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நல்ல நிலையில் உள்ளன. 34,538 கட்டடங்களில் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளபட வேண்டும். மேலும் 62,151 கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட கட்டட உரிமையாளர்களுக்கு தங்கள் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உடனடியாக அமைக்க அலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பயன்பாடற்று உள்ள 188 சமுதாய கிணறுகள் கண்டறியப்பட்டுள்ளன. இக்கிணறுகளை புனரமைக்கும் பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இக்கூட்டத்தில் பருவமழைக்கு முன்னதாக அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்க இக்குழுக்களை சேர்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சுமார் 45,000 தெருக்களிலும் பருவ மழைகாலங்களில் மழைநீரை சேகரித்த நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கும் வகையில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையில்லாத வகையில் இடங்களை கண்டறிந்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்க ஆணையாளர்கள் அவர்கள் அலுவலர்களுக்கு அறுவுறுத்தினர்.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், இ.ஆ.ப., முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமைப் பொறியாளர் திரு.எஸ்.ஆறுமுகம், தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**